1987 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனால்தான் மத்திய அரசுக்கு நாம் ஒரு கடிதம் எழுதியிருக்கிறோம். பணியாளர் அமைப்பு, அதுபோன்று ஊதிய விகிதம், இவைகளையெல்லாம் அந்தந்த மாநில அரசு மட்டத்திற்கே விட்டுவிடவேண்டுமென்று மத்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் 5 கேள்விகள் இருக்கின்றன. 7 நிமிடத்தில் முடிக்கவேண்டும்.

தமிழக முதல்வர் சத்துணவுத் திட்டத்திற்கு
தனியார் வழங்கிய நன்கொடை:

256—(*வினா எண். 7676) திரு. கே. உச்சி: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக முதல்வரின் சத்துணவுத் திட்டத்திற்குத் தனியார் வழங்கிய நன்கொடை எவ்வளவு (1984-85 ஜூன் வரை)?

(ஆ) அது எந்த அடிப்படையில் பயன்படுத்தப்படுகிறது?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கு, ஏப்ரல் 1984 முதல் ஜூன் 1985 வரை தனியார் வழங்கிய நன்கொடை ரூ. 32,09,589.75.

(ஆ) இந்த நன்கொடைத் தொகை ஊராட்சி ஒன்றியங்களில் குழந்தைகள் சத்துணவுக்கூடங்கள் கட்டுவதற்குப் பயன் படுத்தப்பட்டு வருகின்றது.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இவ்வளவு பெரிய தொகையில், மிகப் பிரம்மாண்டமான ஒரு திட்டமாக சத்துணவுத் திட்டத்தைத் தமிழக அரசும், புரட்சித் தலைவர் அவர்களும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதிலே பணியாற்றக்கூடிய அமைப்பாளர்களுக்கு ஊதியம் மிகவும் குறைவு என்ற நிலை இருக்கிறது. அதை உயர்த்தித் தர ஏதாவது திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்காவது ஊதியக் கமிஷனிடம் நம்முடைய சத்துணவுப் பணியாளர்கள் தங்களுக்கு ஊதிய உயர்வு வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். ஆனால், அந்த ஊதியக் கமிஷனின் பரிந்துரைகளிலே எதுவும் சொல்லா விட்டாலும், நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள், அவர்களுடைய நலன் கருதி அவர்களுக்குச் சம்பளத்தைத் தற்போது உயர்த்தியிருக்கிறார்கள்.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் பணியாற்றக் கூடிய எல்லா அதிகாரி களுக்கும் மலைப்படி வழங்கப்படுகின்றது. அதேபோன்று இந்த அமைப்பாளர்களுக்கும் மலைப்படியைச் சேர்த்துத்தர குறிப்பு ஏதாவது உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மலைப்பகுதியிலே இருக் கின்றவர்கள் தான் அந்தப் பணியிலே அமர்த்தப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கென்று தனிச் சலுகைத் தேவையில்லை.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு மத்திய அரசாங்கம் கொடுக்கின்ற சம்பள விகிதம் எவ்வளவு என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, இரண்டு விதமான சம்பள விகிதங்கள் வழங்கப்படுகின்றன. ஆகவே, தனிக் கேள்வி போடவும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பனைவெல்ல கூட்டுறவுச் சங்கங்கள்.

257—(*வினா எண். 9054)—திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பனைவெல்ல கூட்டுறவுச் சங்கங்கள் இயங்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை இயங்க வைக்க திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இயங்காமல் உள்ள சங்கங்களை அவைகளின் அருகாமையிலுள்ள செயல்படும் சங்கங்களுடன் ஒருங்கிணைத்து செயல்பட வைக்க தக்க நடவடிக்கையினை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் எடுத்து வருகிறது.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் நல்லாறு அணைக்கட்டு

258—(*வினா எண். 440)—திரு. இரா. தாமரைக்கனி, திரு. பி. கந்தசாமி, திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தில் நல்லாறு என்னுமிடத்தில் அணைகட்டும் திட்டம் அரசு ஆய்வில் உள்ளதா